1978 மார்ச் 27]

மன்னார்குடியிலுள்ள நடுநிலைப் பள்ளி.

*673 வினு—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகரில் உள்ள ஜெயலக்ஷ்மி விலாஸ் நடுத்தரப் பள்ளியை மூடி விடுவதாக அதன் நிர்வாகி அறிவித்துள்ளாரா?

(ஆ) அந்தப் பள்ளியை எடுத்து நடத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) ஆம்.

(ஆ) மன்னார்குடி நகாமன்றம் இப்பள்ளியை எடுத்து நடத்துவதற்கு அறிவுரை வழங்குவது பரிசீலனையில் இருக்கிறது.

பாளையங்கோட்டையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி.

*674 வினு—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், பாளையங்கோட்டையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9.10)

திரு. துரை கலியமூர்த்தி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று பாளையங்கோட்டையிலே, சுற்றுப்புற வட்டாரத்திலே பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று அமைத்தால் நல்லதாக இருக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. அதை அரசுக்கும் மனுவாக அனுப்பி இருக்கிருர்கள். அதே நிலையிலே இன்று யூனியன் தலைமையிடமாக அமைப்பதற்குக் குறிப்பு இருக்கிறது. அதற்காக உடனடியாக இதைச் செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது அங்கே பெண்களுக்கான ஒரு உயர்நிலைப் பள்ளியை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சிகளில் தென்னை வளர்ப்பு.

*675 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மன்றங்களுக்கு தென்னை வளர்ப்புக்காக உதவித் தொகை ஏதேனும் வழங்கப்படுகின்றதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அரசு ஆணை 1062, நாள் 18-6-1977-ல் ஊராட்சித் தோட்டங்களைப் பராமரிக்க ஊராட்சி ஒன்றியம் ஒன்றுக்கு ரூ. 700 வீதம் 1977-78-க்கு ஒதுக்கப் பட்டுள்ளது. மாவட்ட அளவில் மொத்தத் தொகையையும் மாவட்ட ஆட்சியர் தேவையுள்ள ஊராட்சிகளுக்குப் பகிர்ந்து கொடுக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதில் தென்னை பராமரிப்பும் அடங்கும்.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட புயலின் காரணமாக ஏராளமான தென்னந்தோப்புகள் நாசமாகி இருப்பதாலே, இந்த ஒதுக்குதல் நார்மலாக இருக்கக் கூடிய ஒதுக்குதலாக இருக்கும்படி, அங்கு ஏற்பட்ட நஷ்டத்தைப் போக்குவதற்கு சீக்கிரமாக அந்த தென்னந்தோப்புகள் வரு வதற்கு பைனான்சியல் அசிஸ்டன்ஸ் ஏதாவது செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது பொதுவாக ஒதுக்கப்பட்ட ஒன்று. வெள்ளத்திலே பாதிக்கப் பட்டவைகளுக்கு ஒதுக்குகின்ற விவரம் இல்லை.

திரு. துரை கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்குவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஊராட்சி மன்றங்களில் உள்ள அந்தத் தோட்டங்களில் ஊர் மகிழ்ச்சியாகவும், மணமாகவும் இருப்பதற்கு ஒவ்வொரு ஊராட்சி மன்றங்களுக்கும் ஒரு சந்தன மரம் அளிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.